செ.வெ.எண்:27 நாள் :15.03.2021

## சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவு நடைபெற முதல்தலைமுறை வாக்காளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வேண்டுகோள்.

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி அரசு மகளிர் கலைக்கல்லுரியில் இன்று (15.03.2021) வாக்காளர் விழிப்புணர்வு குறித்த பல்வேறு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகின்ற 06.04.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள 80 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், முதல் தலைமுறை வாக்காளர்கள் மற்றும் அனைத்து வாக்காளர்கள் என அனைவரும் 100 சதவிகிதம் வாக்களிக்கும் விதமாக வாக்காளர் விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், அதிநவீன மின்னணு வீடியோ வாகனம் மூலம் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு குறும்படங்கள் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. மகளிர் திட்டம், சுய உதவிக் குழுக்கள், வருவாய் துறை மற்றும் உள்ளாட்சி துறை என அனைத்து துறை பணியாளர்கள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பயன்பாடு குறித்த முகாம் நடைபெற்று வருகிறது.

இன்று (15.03.2021) அரசு மகளிர் கலைக்கல்லுரியில் முதல் தலைமுறை வாக்காளர்களான மாணவியர்கள் 100 சதவிகிதம் வாக்களிக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். தேர்தல் நாளன்று (06.04.2021) தங்களை சார்ந்துள்ளவர்களையும் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று 100 சதவிகிதம் வாக்களிக்க வலியுறுத்த வேண்டும். தேர்தல் நாளன்று ஒவ்வொருவரும் தனது ஜனநாயக கடமையை மேற்கொள்ள உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள வாக்காளர்கள் அனைவரும் **"100 சதவிகிதம் வாக்கு, அதுவே எங்கள் இலக்கு"** என்ற உறுதிமொழி எடுத்துக்கொண்டு நடைபெறும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவு நடைபெற அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த உறுதிமொழி வாசிக்க அனைத்து மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். தொடர்ந்து, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் செயல்பாடு குறித்தும் மற்றும் **"www.nvsp.in"** என்ற இணையதளம் வாயிலாக வாக்காளர் அடையாள அட்டை பதிவிறக்கம் செய்வது குறித்து விளக்கவுரையும் வழங்கினார். தொடர்ந்து, வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக நடைபெற்ற ஓவியப் போட்டியை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) திரு. எஸ்.தேவராஜ், வட்டாட்சியர் (அரசு கேபிள் டிவி) திருமதி.பொன்னாலா, அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் திரு.ஜி.கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.தே.ராம்குமார், கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**